# எழுத்தாளர் வித்யாசாகர்



**இணையத்திலும், இலக்கிய உலகிலும் பல்வேறு அன்பர்களைத் தன் இரசிர்களாகக் கொண்டு, தமிழ் மண்ணை விட்டு, குவைத்தில் பணிசெய்யும் பொழுதும், தமிழிலக்கிய வானில் நட்சத்திரமாய் மின்னும் எழுத்தாளர், கவிஞர் திரு வித்யாசாகர் அவர்களுடன் இலக்கியவேல் ஆசிரியர் சந்தர் சுப்ரமணியன் மேற்கொண்ட நேர்காணல்.**

***வணக்கம். குவைத்தில் இருந்து பணி யாற்றும் நீங்கள், தமிழ்மொழியின் மீது அளவற்ற காதல் கொண்டுள்ளதற்கான பின்புலம் என்ன?***

*என் தாய்மண் மீதான அக்கறை. மொழி எனது களம்,;அது போராடுவதற்கு இடம் தருகிறது. மொழி எனது ஆயுதம்; எனது கோபத்தை எழுத்தாக்கப் பயன்படுகிறது. மொழி எனது யாவும்; அது என்னைத் தான் வாழ்ந்த காலத்திலிருந்து வந்தவனாக் குகிறது. மொழி எனது தமிழ்; அது என்னைத் தன்னோடு ஈர்த்துக் கொள்கிறது.*

*ஆங்காங்கே இரண்டாம்பட்சம் ஆகிப் போன என் மக்களை எண்ணி எண்ணி நோவதன் பொருட்டு, உலகின் எம் மூலையில் இருந்தாலும் தமிழர்க்கு மொழி குறித்தும் இனம் குறித்தும் விடுதலை பற்றியுமொரு ஈர்ப்பு இருந்து கொண்டேதான் இருக்கிறதென்பதை எனது வாழ்வனுபவமாக உணர்கிறேன்.*

***பொதுவாக உங்கள் படைப்புகளில் சமூகச் சிந்தனைகள் வெகுவாக காணப் படுகின்றன. இதற்கான காரணம் நீங்கள் வளர்ந்த சூழலில் கண்ட காட்சிகளின் தாக்கமா அல்லது, இலட்சிய உலகைக் காணவிழையும் இலக்கியவாதியின் நோக்கா?***

*லட்சியம் என்று பெரிதாய் ஒன்றுமில்லை. ஆயினும் என் மக்கள் விடுதலைக்கான வலி; எனது மண்ணின் சமத்துவத்திற்கான சமர்; என் வழித் தடத்தில் உள்ள தூசையாவது கலைந்து போகச் செய்யும் முயற்சியின் ஊடே சமூகம் குறித்து சிந்திக்க வேண்டி*



யுள்ளது.

யாரோ செய்தார் யாரோ செய்தார் என்பதை விட தவறுகளைத் தான் செய்ததாய் ஏற்றுத் திருத்திக் கொள்ளவும், நல்லதை நானே செய்ய முன்வருவேன் எனும் முன்னெடுப்பிலும் மட்டுமே நான் முனைப்பாக, ஆதாரமாக நின்று, உடன் வருவோரையும் நன்னிலம் நோக்கித் திருப்ப எண்ணுகிறேன்.

இப்படி வாழ் என்று சொல்லிச் செல்வதைவிட, வாழ்வின் நோக்கில் உலகை மாற்ற விழைகிறேன். என்னைப் பொறுத்தவரை, சமூக பொதுநல அக்கறை என்பது படைப்பாளிக்கு மட்டுமே வேண்டிய ஒன்றாக இல்லாமல் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளதொரு குணமாக மாறுதல் வேண்டும். தெருவில் போகும் ஒரு பிச்சைக்காரனுக்கு நானும் பொறுப்பென்று ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். அன்று மனிதம் தானே செழித்தோங்கும்.

**வாழ்க்கையின் அவலங்களை உங்களின் பல படைப்புகளில் மிக யதார்த்தமாகச் சித்தரிக்கும் நீங்கள், அத்தகைய ஒவ்வொரு நிகழ்வுக்கும் தீர்வையும் வைக்கின்றீர்களா? ஆம் எனில், அத்தீர்வு சாத்தியமா?**

எனது படைப்புகளைத் தொடர்ந்து வாசிப்போர் உணர இயலும். பொதுவாக நான் எந்தத் தீர்வையும் சொல்ல முயல்வதில்லை. எனக்குத் தெரிந்த 'இன்றைய சரி'. 'நாளை தவறா'க மாறலாம். எனக்கு இரண்டு தேக்கரண்டி சர்க்கரை ஒரு குவளை தேநீருக்கு போதுமெனில் மற்றவருக்கு மூன்று தேக்கரண்டி தேவைப் படுகிறது. இன்னும் சிலருக்கு ஒன்று கூட போதும், சிலருக்கு சர்க்கரையே இல்லாது இருந்தால் சரி என்கிறார்கள். எனில் இந்த சரி-தவறு விகிதாச்சாரமே அவரவர் சுவை உணர்வு, அறிவுக்கு ஏற்றாற்போல் மாறும்பொழுது எது சரி எது தவறு என்று தீர்மானிக்க எவரால் முடியும்?

இயற்கையில் நேராக முளைத்த முடிதான், சாய்வாக வளைத்து அழுத்தி வாரிவிட்டு அதை நாம் நேர் என்கிறோம். தலை வாரியவன் ஒழுக்க மானவன், இல்லாதவன் ஒழுக்க மற்றவன் எனில் யாரிங்கே குற்றவாளி? எல்லாம் காலத்தின் கைக்குள்ளே அடங்கிப்போகும் வாழ்க்கையிது. இந்தக் காலம்தான் நமை அவ்வப்பொழுது அதன் இயல்பு வடிவத்திற்கு ஏற்ப நமை மாற்றியும்விடுகிறது.

எனவே இங்கே சிந்தனையைத் தூண்டவும், வாழ்வின் அனுபவங்களை ஆதாரமாக வைக்கவும், சமகாலத்தை இதுவென்று பதிந்து செல்லவுமே இலக்கியத்தில் இடம் வேண்டியுள்ளது. அதையே நானும் செய்கிறேன். எழுதுவது நானாயினும் சரி, அது யாராயினும் சரி, சிந்திப்பது வாசிப்பவராக இருத்தல் வேண்டும். எனவே நல்ல சிந்தனையை படிப்பவருக்கு தரும் எழுத்தாகவே எனது எழுத்தும் இருக்கவேண்டும் என்பதே எனது எண்ணமும். ஆயினும் சாதியில் மேல்கீழ், விதவையின் மறுமணம், இறை தத்துவம், எண்ண வலிமைப் பயிற்சி என்றெல்லாம் வருகையில் சிலநேரம் அதனதன்

முக்கியத்துவம் கருதி தீர்வினைச் சொல்லவும் கட்டாயம் வந்து விடுகிறது.

**புதுக்கவிதையில் பல்வேறு நூல்களைப் படைத்துள்ள நீங்கள், உங்களுடைய முன்னோடியாக யாரைப் பின்பற்றுகிறீர்கள்? அவருடைய தாக்கம் உங்கள் படைப்புகளில் எவ்வாறு பிரதிபலிக்கிறது?**

எனக்கு முன்னோடி எனில் அது நான் வாழும் வாழ்க்கையும், அன்றாடம் காணும் எனது சமகால மனிதர்களும், விலங்குகளும், பூவும் மரமும் மண்ணும் மழையும் காற்றும் வானமும் நட்சத்திரங்களும் எனலாம்.

இளமைக்கால வயதில் விவேகானந்தர், சாண்டில்யன், பாலகுமாரன், சுஜாதா, தேவிபாலா, ராஜேஷ்குமார், ரமணி சந்திரன், வைரமுத்து என இன்றும் நிலைத்திருக்கும் சில ஜாம்பவான்களின் சில படைப்புகளும், ஆன்மிகக் கதைகளும், ஆனந்தவிகடன், குங்குமம், ராணி, குமுதம் போன்ற வார இதழ்களும், பல திரைப் படங்களின் வழியாகவும் வாழ்வைப் படித்ததுண்டு. அவற்றோடு சேர்ந்த அன்றைய ஆதார நிகழ்வுகளையே எனது படைப்பு களுக்குத் தேவையான ஆக்கவிதை களாகவும் மாற்றிக் கொள்கிறேன்.

எனவே எனக்கு முன்னோடி எனில் எனக்குமுன் வீசும் காற்றும், முளைவிடும் ஒரு வித்தும், கதறியழும் குழந்தையின் பசியும், மழை கசியும் கூரைவீடும், யாரோ ஒரு தூரத்து நண்பன் எழுதும் கவிதையும் கூட எனக்கு முன்னோடி தான்.

**குவைத்தில் அமர்ந்துகொண்டு இந்தியச் சூழலில் இந்தியாவில் நடக்கும் நிகழ்வுகளை எழுதுவது எப்படிச் சாத்தியமாகிறது?**

இரத்தம் குழையும் உடம்பிற்குள் பாய்வது எனது தாயகத்திலுள்ள உறவுகளின் வலியும் சந்தோசமும் தானே? உலகின் எம்மூலையில் இருந்தாலும் வாழ்வின் அர்த்தத்தை ஊருக்குள் தானே வைத்திருக்கிறோம்? நான் வெற்றி கண்டால் பேசவும், துவண்டு விழுகையில் வார்த்தையினால் அணைத்துக்கொள்ளவும் எனது தாயும் தாய்மண்ணும் எனக்கு ஒன்று தானே? எந்த இடத்திலிருந்து துவங்கினோமோ அந்த இடத்தை நோக்கித் தானே பயணப்பட்டுக் கொண்டுள்ளோம்? பிறகு எனது எழுத்துக்களுக்கு மட்டும் விதிவிலக்கென்ன?

வெறும் எனக்கு மட்டும் பசி எனில் அங்கேயே ஒரு இட்டிலித் துண்டையோ அல்லது அரைத்தட்டுச் சோற்றையோ என்னால் இலகுவாகச் சம்பாதித்துக்கொண்டிருக்க முடியும். ஆனால் எனது பசி பலருக்கான பசி. எனது வயிறு பலர் உண்ணுவதில் நிறைகிறது. அதுபோல்தான் எனது எழுத்துக்களும் எப்பொழுதும் முதலில் தாய்மண்ணையே தாங்கிநிற்கிறது.

**வெகுவாக நீங்கள் கவிதைகள், கதைகள், கட்டுரைகள் ஆகையன குறித்த படைப்புகளைப் படைத்துள்ளீர்கள். இன்றுவரை எவ்வளவு படைப்புகள் பதிப்பாகியுள்ளன? அடுத்து வெளி வரும் படைப்புகள் எத்தகையன?**

ஏராளமான படைப்புகள் புத்தகமாக உள்ளன. இருபத்தொன்று முடிந்தும் இன்னும் இருபதுக்கும் மேல் அச்சிடவும் உள்ளன. 'பிஞ்சுப்பூ கண்ணழகே' எனும் மகள் அப்பா பற்றிய கவிதைகளும், 'நீ சிரித்தால் பனிவிழும் மலருதிரும்' காதல் கவிதைகளும், 'அம்மையெனும் தூரிகையே', 'கல்லும் கடவுளும்', 'காற்றாடி விட்ட காலம்', 'பறந்து போ வெள்ளைப்புறா', 'சொட்டும் வியர்வையில் சுதந்திரக் கனவுகள்', 'நீயே முதலெழுத்து', போன்ற சமூகக் கவிதைகளும், 'ஞானமடா நீயெனக்கு' எனும் அப்பா மகன் பற்றிய கவிதைகளும், வாழ்த்துப் பா, சிறுவர் பாடல்கள், 'கண்ணீர் வற்றாத காயங்கள்' எனும் ஈழத்துக் கவிதை யுமென நிறைய படைப்புகள் அச்சு வேலைகள் நடந்துகொண்டுள்ளன.

இவையன்றி, 'திரைமொழி எனும் திரைப்பார்வை'. மூன்று மணிநேரம் செலவிட்டு நாம் பார்க்கும் திரைப் படத்தினை நான் பார்த்த விதம். பொழுதைப் போக்கும் படங்களாக அல்லாமல் பொழுதினை ஆக்கும்

திரைப்படங்களாக அவைகளை நாம் எவ்வாறு மாற்றிப் பார்க்கலாம் என ஒரு கட்டுரைத் தொகுப்பும். 'மீனும் மீனும் பேசிக்கொண்டன' எனும் உயிர்த் தொடர்பு பற்றி பேசும் தொடர்கட்டுரைத் தொகுப்பும், சிறுகதைத் தொகுதி மற்றும் 'காற்றின் ஓசை' எனும் ஒரு நீண்ட நன்னடத்தைகளைப் பேசத்தக்கதொரு நாவலும், சில குறுநாவல்களுமென வீட்டில் விற்காமல் அடுக்கியுள்ள புத்தகங்கள் போக எனது வலைதளத்துள் அடுக்கி வைத்துள்ள வெளிவராத படைப்புகள் ஏராளமுண்டு.

***இலங்கையைக் குறித்த உங்கள் படைப்புகள் பலவுள்ளன. உலக ளாவிய நிலையில் உங்கள் படைப்பு களை படைக்கவும், அவற்றைக் கொண்டு சேர்க்கவும் எப்படிச் சாத்தியமாகிறது?***

பார்க்கப் பார்க்க வலிக்கிறது. வலிக்க வலிக்கப் பீறிடும் உணர்வுகள் கவிதைகளும் கதைகளுமாகின்றன. மொத்தத்தில் அக்கறை, என் சமுதாயத்தின் மீதும் மக்களின் மீதும் மண் மீதும் கொண்டுள்ள அக்கறையே இரைதேடி உயிர்வாழும் பறவையைப் போல எனை கவிதை கதையெனவும் தேடியலைய வைக்கிறது.

குறிப்பாக ஈழத்தில் வாழும் தொப்புள் கொடி உறவுகளுக்கு நேரில் சென்று உதவயியலாவிட்டாலும் எழுத்தாக வேணும் எழுந்து நின்று தோள் தருவோமே எனும் பதைபதைப்பில் வருவதே ஈழத்துப் படைப்புகளுக்கான காரணம். பிறமொழிக்காரரர்களின் இருட்டடிப்பில் தான் இன்று தமிழர் நிலை எங்கு காணினும் இரண்டாம் பட்சத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. பிறகு நாமும் நம்முறவுகளை, அவர்களின் வாழ்வுநிலையை மறந்து ஒரு பிடி சோறள்ளித் தின்போமெனில் - நன்றாக உறங்குவோமெனில் - அதற்கு முன் நம் மனிதத்தையும் நாம் தொலைத்தே நிற்கிறோம் என்றர்த்தம்.

***உங்களுடைய படைப்புகளில் பெரும் பான்மையானவை உங்கள் சொந்த பதிப்பகமான முகிலின் வெளியீடுகள் தாம். வணிகரீதியாக எப்படி நிர்வகிக்கிறீர்கள்?***

இப்படி வேண்டுமே என்றொரு குருவி சிறுசிறு குச்சிகளைப் பொறுக்கி அழகானதொரு கூடுதனைப் பின்னுவதைப்போல் நானும் எனது வியர்வைத்துளிகளைச் சேகரித்து, சேகரித்து, புத்தகமாக்கிக் கொண்டு வருகிறேன்.

ஆயிரம் புத்தகம் அச்சடித்தால் அதில் பத்து புத்தகங்களைப் பெற்றுக் கொண்டு ஹிக்கிம்பாதம்ஸ் மட்டும் தவறாமல் பணம் கொடுத்து உதவுகிறார்கள். மீதி தொள்ளாயிரத்து தொண்ணூறு புத்தகங்களும் எனது உழைப்பை, தூக்கத்தை, இயலாமை யைப் பார்த்துச் சிரித்தவாறு பரண் தனில் கிடக்கின்றன. அதில் பாதி சிலவேளை சில கடைகளில் கணக்கின்றி கொடுக்கப்பட்டுள்ளன. காசு மட்டும் இதுவரை தவறாமல் தர மறுக்கப் பட்டுள்ளது.

***உங்களுடைய படைப்புகளை ஆய்வு செய்து சில மாணவர்கள் தங்கள் முதுமேநிலைப் பட்டங்களைப் பெற்றுள்ளார்கள். அதுகுறித்து சில தகவல்கள்?***

புத்தகங்கள் விற்காவிட்டாலென்ன, என் அறிவும் உழைப்பும் அனுபவமும் இன்றைய மாணவச் செல்வங்களுக்கு உதவி இருக்கிறதே அது போதுமென்று நிறைவு கொண்ட ஒரு நற்செயல் அது நிகழ்ந்தது, நண்பர் திரு. கவியருவி இரமேசு என்பவர் மூலம்.

அவருடைய ஏற்பாட்டின் மூலம் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தில் எனது பல நூல்கள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டு "வித்யாசாகரின் எழுத்துக்களில் பெண்ணியம்" என்றும் "கனவுத்தொட்டில் நாவல் ஓர் ஆய்வு" என்றும் இரு ஆய்வுகள் நடந்து செல்வி ரா. மகாலட்சுமி மற்றும் திருமதி அ. கீதா போன்றோர் பட்டங்களைப் பெற்றனர்.

***உங்கள் படைப்புகளுக்காக உலக அளவில் பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளீர்கள். அதுகுறித்த உங்கள் கருத்து?***

லண்டன் தமிழ் வானொலி, ஆஸ்திரேலிய தமிழ் வானொலி, குளோபல் தமிழ் தொலைக்காட்சி மையம், இலங்கை தீபம் தொலைக் காட்சி போன்றோர் எனது படைப்புகள் குறித்து அறிமுகம் தந்தும் விருதுகள் பற்றி பேசியும் நேர்க்காணல் கண்டும் பெருமை செய்துள்ளனர்.

தமிழ்த்தாய் அறக்கட்டளை அமைப்பு 2010-இல் உலக தமிழ்க்கவிதை மற்றும் சிறுகதை அமைப்பும் சேர்ந்து ஒரு உலக மாநாடு ஒன்றை நடத்தியது. அதில் ஐயா திரு வா. மு. சேதுராமன் அவர் களின் திருக்கரங்களால் கொடுக்க, அம்மா அங்கே நேரிடையாக எனக்கு பதிலாகச் சென்று ஐந்து விருதுகளை இலக்கியச்செம்மல் இரண்டு, தமிழ்மாமணி, கவிமாமணி என எல்லோர் முன்னிலையிலும் வைத்துக் கொடுத்துப் பெருமையுறச் செய்தது.

அதுபோல் குவைத்தில் நடந்த பெருவிழா ஒன்றில் நமது இந்தியத் தூதர் அவர்களின் திருக்கரங்களால் 'தமிழோசை கவிஞர்கள் சங்கம்' திரு. தம்பி ராமையா மற்றும் கதாநாயகன் விமல் போன்றோரின் முன்வைத்து பன்னூற்பாவலர் எனும் பட்டத்தைக் கொடுத்து பெருமைபடுத்தியது.

அதுபோல் நீதியின் குரல் மாத இதழ் வழங்கிய "வெண்மனச் செம்மல் வித்யாசாகர்" விருது வழங்கி கௌரவித்தது. அடுத்து கலைமகள் இலக்கிய இதழ் நடத்திய ராமரத்னம் குறுநாவல் போட்டியில் முதல் பரிசு, மற்றும் சென்ற 2015 - ஆம் ஆண்டிற்கான சிறந்த படைப்பாளி விருது மற்றும் பல பரிசுகளும் பாராட்டுகளும் மனத்தைச் நிறை வடையச் செய்துள்ளன. ஒரு நல்ல படைப்பாளி எனும் நம்பிக்கையை இச்சமூகம் அவ்வப் பொழுது இப்படிக் கொடுப்பது நிறைவாகவே உள்ளது.

***அண்மையில் உங்கள் படைப் பாற்றலுக்கு அணிசெய்யும் வகையில் உங்களுக்கு டாக்டரேட் பட்டம் வழங்கப்படுவதாக அறிவிக்கப் பட்டது. அதுகுறித்த உங்கள் சிந்தனைகள்?***

ஆம் அழைத்திருந்தார்கள். அறிவித் திருந்தார்கள். அமெரிக்க உலகத்தமிழ் பல்கலைக் கழகத்தின் சார்பில் கௌரவ முனைவர் (டாக்டர்) பட்டம் தருவதாகச் சொன்னார்கள். நானும் விடாது எனக்கெதற்கு டாக்டர் பட்ட மெல்லாம், நானென்ன அப்படிச் செய்து விட்டேன் என்றேன், அதற்கு அவர்கள் இதுவரை நாற்பது வரை புத்தகங்கள் எழுதியுள்ளதைப் பாராட்டியும், அதிலும் அதை வெளி நாட்டில் வசித்துக்கொண்டு தமிழ்ப் பணி செய்தமையாலும், சிறந்த படைப்புக்களைத் தந்துள்ளதாகவும், ஆய்வுகள் மேற்கொண்டதன் அடிப் படையில் மொழி வளத்திற்கு உதவியதாகவும் ஒவ்வொரு நாட்டிலிருந்து தேர்வு செய்வதைப் போல் இம்முறை குவைத் நாட்டிலிருந்து ஒரு படைப்பாளியாக என்னைத்தேர்ந்தெடுத்ததாக விவரம் சொன்னார்கள். ஆயினும் விழா நேரம் வேலையின் காரணமாக விடுப்பு கிடைக்காமல் செல்ல மறுத்து விட்டேன். ஒருவேளை மீண்டும் வரும் வருடத்தில் அதே டாக்டர் பட்டம் மீண்டும் கிடைக்கப்பெறலாம்.

***இலக்கியம் தவிர நீங்கள் பல்வேறு சமூக சேவைகளையும் செய்து வருகிறீர்கள். அதற்குப் பக்கபலமாக உங்களுக்கு உங்கள் குடும்பத்தாரும் துணைசெய்கின்றனரா?***

நிச்சயமாக. இறைவன் அளித்த வரங்கள் எனது உறவுகள் அனைத்தும். நட்பாயினும் சரி, அம்மா அண்ணி அண்ணன் தம்பிகள் துணைவியர் யாராயினும் எங்களுக்குள் ஒருவரைப் பற்றிய ஒருவருக்கான புரிதலும் அதே நேரம் சமூகம் குறித்து உதவுவதற்கான சிந்தனை பல்வேறு வடிவில் அனைவருக்குமே உண்டு.

குறிப்பாக எனது மனைவியைப் பற்றிச் சொல்லியாக வேண்டும்: "பத்து வருடங்கள் கடந்து திரும்பிப் பார்க்கையில் நான் அவளாகவும் அவள் நானாகவும் மாறியிருந்தோம்". அங்ஙனம் சேவைகள் குறித்தோ எழுத்து குறித்தோ எனது செயல்பாடுகளிலும் சரி அவருடைய ஒப்புதலிலும் சரி எங்களுக்குள் வேறுபாடெல்லாம் இருந்ததேயில்லை.

பொதுவாகவே நாங்கள் நிறைய பேசிக் கொள்வதுண்டு. கண்ணாடிக்குள் அடைப்பட்ட நீரினிடையே எந்த ஒரு பிரிவை இது இந்த நீர் இது இந்த நீர் என்று பார்க்க இயலாதோ அதுபோல் எங்களுக்குள்ளும் எந்தவொரு பிரிவுணர்வோ மாற்றத்தையோ பார்க்க இயலாது. மொத்தத்தில் அவர் எனக்கு மூத்த மகள்; அவருக்கு நானும் அதுபோலவே.

**இவ்வளவு சிறிய வயதில் இத்தனைப் படைப்புகளைப் படைத்துள்ள நீங்கள், இலக்கியத்தில் இன்னும் என்ன வகையான சாதனைகளைச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுள் ளீர்கள்?**

இருபத்திநான்கு வருடத்திற்கு முன் பத்தாம் வகுப்பு படித்துவிட்டு வெளியே வந்தேன். எனது முதல் சம்பளம் எனது பதினான்கு வயதில் நான் வாங்கியது பத்து ரூபாய். சிறு வயதில் தீக்குச்சி அடுக்கி, ஊதுவத்தி அடுக்கி, வாசனை திரவியம் தோய்த்து விளையாட்டாக சம்பாதித்தது பதினைந்து இருபது இருபத்தைந்து காசுகள். அப்போது எனது பெயர் வெங்கடாசலம் மட்டும் தான்.

அதே வெங்கடாசலம் வித்யசாகராகி புத்தகங்கள் பல எழுதி, ஆய்விற்கு உதவி, பிறந்தநாளிற்கு 2010-தில் முதல் தமிழ்ப் பாடல் எழுதி, விடுதலைக்கும் ஒற்றுமைக்கும் குழந்தைப் படிப்பிற்கும் பாடல்களை இசையோடு தனது முகில் (கிரியேசன்) படைப்பகம் மூலம் தயாரித்து வெளியிட்டு, முகில் பதிப்பகம் துவங்கி பிறரது புத்தகங் களையும் அச்சிட்டு தந்து அதோடு கூடவே தனது படிப்பையும் தொடர்ந்து முதுகலைப் பொறியியல் பட்டம் பெற்று, உயர் ஆய்வாளருக்கும் படித்து உலகளாவிய பதிவு செய்யப்பட்டவர்களில் ஒருவராகி இன்று மாதத்திற்கு லட்சங்களை ஈட்டு அதில் பிறருக்கும் உதவ முடியுமெனில், எனக்கும் கீழுள்ளோரை என்னளவிற்கேனும் கொண்டுவரும் முயற்சியே எனது எழுத்திற்குமான லட்சியமாகும்.

**இலக்கியவேல் வாயிலாக வாசகர் களுக்கு நீங்கள் சொல்லவிழையும் செய்தி ஏதேனும் உள்ளதா?**

உண்மையாக இருக்க முயலுதல் வேண்டும். உண்மைதான் நமக்கான ஒளிவட்டம். இயல்புநிலை புரிய எந்த வொரு சூழலையும் அணுகவேண்டும். பிறர் மனசு பிற உயிர்கள் நோகாது வாழவேண்டும். பிறருக்கு இயன்றவரை உதவவேண்டும். எல்லாம் நாம் ஒன்றென்று அறிதல் வேண்டும். எல்லோரும் இயற்கையின் பிள்ளைகள் எனவே நமக்கு மதம் என்பது ஒரு பயிற்சி. கடவுளைப் புரிந்துகொள்ள உதவும் சாதனங்களே மதம், சடங்குகள் இவையாவும். எனவே மதங்களுக்குள் சண்டையோ பிரிவினையோ மனிதர் களுக்குள் ஏற்றத் தாழ்வோ எல்லாம் பார்க்கக் கூடாது. மேல் கீழ் வருமாறு நம் வாழ்க்கை அமைந்திடக் கூடாது என்பதிலெல்லாம் எச்சரிக்கை வேண்டும். எல்லாம் உயிர்க்கும் பயம் உண்டு; பசி உண்டு; கோபம் உண்டு என்னும் உள்ளச் சமநிலை உணர்வு எல்லோருக்கும் இருத்தல் வேண்டும். மன்னிப்பும் மனது நிரம்பிய அன்பும் கனிவு கொண்ட பார்வையும் தெளிவு கொண்ட நடையும் கம்பீரமும் வேண்டும். தவற்றைக் கண்டால் எவர்செயினும் கண்டிக்கும் வீரமும் திருத்தும் அறிவு பலமும் உடல் வலிமையையும் மன திடமும் ஒருங்கே எல்லோருக்கும் இருக்குமாறு நாம் எல்லோரும் வாழ்தல் வேண்டும்.

இந்த வான் மண் காற்று போல நீர் போல நிலவு சூரியனைப் போல என்று நான் உனக்கும் நீ எனக்கும் பொதுவாய் அன்புற்று அமைகிறோமோ அன்றே அவசியமற்றுப் போகும் பாதுகாப்பு ஏவுகணைகளும் போர்க்களங்களும். எனவே உள்ளத்து அன்பை கையி லேந்தி எல்லோருக்கும் காட்டுங்கள். இயல்பாய் நிறைவாய் எல்லோரும் வாழட்டும். எங்கும் அன்பும் அமைதியும் நிலவட்டும். எம் மண்ணிலிருந்து ஒரு நன்னிலத்திற்கான அடையாளம் நீண்டு பரவி உலமெங்கும் பரவட்டும். பரவட்டும்.

இலக்கியவேலிற்கு நன்றி. ஆசிரியருக்கு நன்றி. வாசக பெருமக்களுக்கு நன்றி. வணக்கம். ●